# 22-10-2024 செய்தி

## இந்திய – சீனா ஒப்பந்தம்

- கிழக்கு லடாக்கில் உள்ள எல்லை கட்டுப்பாடு கோடு (எல்ஏசி) பகுதிகளில் ரோந்துப் பணியை மேற்கொள்ள சீனாவுடன் ஒப்பந்தம் எட்டப்பட்டதாக இந்தியா அறிவித்தது.
- இதன்மூலம் நான்கு ஆண்டுகளாக இருநாடுகளுக்கு இடையே எல்லையில் நீடித்து வந்த பதற்றமான பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.
- 2020, ஜூன் மாதம், கல்வான் பள்ளத்தாக்கில் எல்லை தாண்டிய சீன வீரர்களுக்கும் இந்திய படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு இரு நாடுகளுக்கும் எல்லைப் பகுதியில் ரோந்துப் பணி மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் இருந்து வருகின்றன.
- அங்கு இருநாடுகளும் போட்டி போட்டு படைகளைக் குவித்தன. இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டு வந்தது.
- இது குறித்து இரு நாட்டு ராணுவ அதிகாரிகளுக்கு இடையே நடைபெற்ற பலமுறை பேச்சுவார்த்தைகள் முடிவு எட்டப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டு வந்தன.
- இந்த நிலையில் கிழக்கு லடாக் எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகே இரு நாட்டு ராணுவ வீரர்களும் ரோந்துப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.
- கிழக்கு லடாக்கில் உள்ள தெப்சாங், தெம்சோக் பகுதிகளில் ரோந்துப் பணியில் ஈடுபடுவது தொடர்பாக இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டிருக்கும் எனத் தெரிகிறது.

## மால்டோவா பொதுவாக்கெடுப்பு ஐரோப்பிய யூனியனில் இணைய பெரும்பான்மை ஆதரவு

- கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த மால்டோவாவை ஐரோப்பிய யூனியனுடன் இணைப்பதற்கு வழிவகை செய்யும் அரசியல் சாசனத் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக அந்த நாட்டில் நடைபெற்ற பொதுவாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்காளர்கள் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.
- நான்கு புறமும் நிலத்தால் சூழப்பட்ட மால்டோவா, முன்னாள் சோவியத் யூனியனின் உறுப்பு நாடுகளில் ஒன்று. அந்த நாட்டில் நீண்ட காலமாக ரஷியாவின் செல்வாக்கு மேலோங்கியிருந்தாலும், மேற்கத்திய நாடுகளுடனான கூட்டுறவை மேம்படுத்துவதற்கு அண்மைக் காலமாக ஆதரவு அதிகரித்துவருவதாகக் கூறப்படுகிறது.
- வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் மால்டோவை ஐரோப்பிய யூனியனில் இணைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இருந்தாலும், இடையில் ரஷிய ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட அரசு அமைந்தால் இந்த முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படலாம் எஎன்று அஞ்சப்படுகிறது.
- எனவே, ஐரோப்பிய யூனியனில் மால்டோவாவை இணைக்க வழிவகை செய்யும் அரசியல் சாசனத் திருத்தத்தை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.
- இது குறித்து பொதுமக்களின் கருத்தை அறிந்து கொள்வதற்கான பொது வாக்கெடுப்பு நடைபெற்றது.